வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 10.05.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

*அன்னையர் தினம்* (12)

சர்வதேச அன்னையர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதனை ஒட்டி மத்திய அமைச்சர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். சர்வதேச அன்னையர் தினத்தை ஒட்டி மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் டாக்டர் எல் முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் தமது வாழ்த்து செய்தியில் இந்த சமூகத்தின் அனைத்து விதமான முன்னேற்றத்திற்கும் ஒவ்வொரு அன்னையின் தன்னலம் பாராத குணமே அடிப்படையாக திகழ்கிறது. தேசத்தின் வளர்ச்சியில் பங்கெடுக்கும் ஒவ்வொரு குடிமகனையும் வளர்த்து எடுப்பதில் அன்னை முதன்மை பங்கு கொண்டவளாக திகழ்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாம் அனைவருக்கும் கடவுள் கொடுத்த ஒரு வரம் தான் அம்மா. அன்னையின் உழைப்பையும் அன்னையும், தியாகத்தையும் போற்றும் விதமாக அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது. இது பற்றிய ஒரு செய்தித் தொகுப்பு.....

வாய்ஸ்

*அன்னையர் தினம் வாய்ஸ்* (18)

அன்னையர்தினம் என்பது நமது தாய்மையை கொண்டாடும் ஒரு தினமாகும். ஒவ்வொரு வருடமும் மே மாதம் 2 ஆவது ஞாயிற்றுக்கிழமை அன்று இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் நாம் நம்முடைய தாய்க்கு நம் அன்பை வெளிப்படுத்துகிறோம். அன்னையை ஒவ்வொரு நாளும் நாம் போற்ற வேண்டும். அவர் நமது குடும்பத்தின் தூணாக திகழ்பவர். அவர் எல்லாவற்றையும் தியாகம் செய்து அனைவரையும்

மகிழ்ச்சியாக வைத்திருப்பவர். ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு தேதியில் அன்னையர் தினத்தை கொண்டாடி மகிழ்கின்றனர். அமெரிக்காவில் மார்ச் 8 ஆம் தேதி அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது. அன்னையர் தினம் கொண்டாடும் இத்தினத்தில் சிறிய வரலாற்றை தெரிந்து கொள்வது அவசியமாகிறது. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவில் அன்னையர் தினத்தை நிறுவுவதில் அன்னா ஜார்விஸ் முக்கிய பங்கு வகித்தார். 1905 ஆம் ஆண்டில் அண்ணா ஜார்விஸ் தன் தாய் அண்ணா ரிவிஸ் ஜார்விஸ் இறந்த பிறகு அன்னையர் தினத்தை நினைவு கூற ஒரு பிரச்சாரத்தை தொடங்கினார். அமெரிக்க உள்நாட்டு போரின் போது அவர் ஒரு சமாதான ஆர்வலராக இருந்தார். அவரின் தொடர் வெற்றியால் அன்னையர் தினம் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது. இதன் தொடக்கமாகவே அன்னையர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

உயர்மட்ட கூட்டம் மோடி (10)

இந்திய பாகிஸ்தான் சண்டை நிறுத்ததிற்கு இடையே, இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி புதுடெல்லியில் உள்ள தமது இல்லத்தில், பாதுகாப்பு சூழல் குறித்த உயர் மட்ட ஆலோசனை கூட்டத்தை கூட்டியுள்ளார். இக் கூட்டத்தில் பாதுகாப்பு துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல், பாதுகாப்பு அதிகாரி ஜெனரல் அனில் சவுகான், ராணுவத் தலைவர் ஜெனரல் அபேந்திர திபேதி, கடற்படை தலைவர் அட்மிரல் தினேஷ் திரிபாதி, விமானப்படை தலைமை தலைவர் மார்ஷல் அமர் ப்ரித் சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

விக்ரம் மிஸ்ரி (18)

இந்தியா-பாகிஸ்தான் இடையேயான சண்டை நிறுத்தத்தை தொடர்ந்து ஜம்மு காஷ்மீர், குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட எல்லையோர மாநிலங்களில் இயல்பு நிலை திரும்பியுள்ளது. ஜம்முகாஷ்மீர், ஸ்ரீநகர், ரஜோரி, பாரமுல்லா, உரி ஆகிய பகுதிகளில் எவ்வித தாக்குதலும் இன்றி

இன்று அமைதி நிலவுகிறது. பஞ்சாப், ராஜஸ்தான் மாநிலங்களின் எல்லைப்புற மாவட்டங்களில் கடைகள், சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன.

சண்டை நிறுத்தத்தை பாகிஸ்தான் மீறினால் அதனை கடுமையாக கையாள ஆயுதப்படைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மத்திய வெளியுறவுத் துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இது தொடர்பாக செய்தியாளர்களுக்கு விளக்கம் அளித்த அவர், ஆயுதப்படைகள் சூழ்நிலைகளை தீவிரமாக கண்காணித்து வருவதாக தெரிவித்தார். எல்லைக் கட்டுப்பாட்டு பகுதியில் விதிமுறைகளை மீறினால் அதனை கடுமையாக கையாள அறிவுறுத்தப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். துப்பாக்கி சண்டையையும், ராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்திக் கொள்வது தொடர்பான நிலைப்பாடு நேற்று மாலை இந்திய-பாகிஸ்தான் இடையே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த நிலைப்பாட்டை புரிந்து கொண்டு பாகிஸ்தான் செயல்படும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளதாக திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

உள்துறை செயலர் (9)

சண்டை நிறுத்தத்திற்கு பிறகு பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள மாநிலங்களில் உஷார் நிலை குறித்து மத்திய உள்துறை செயலாளர் திரு கோவிந்த் மோகன் நேற்று ஆலோசனை நடத்தி உள்ளார். காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில், பாகிஸ்தான் எல்லையை ஒட்டி உள்ள அனைத்து மாநில தலைமை செயலர்கள் பங்கேற்றுள்ளனர். எல்லைப் பகுதியில் ஏதெனும் விதி மீறல் ஏற்பட்டால், அதனை தற்காப்பு நடவடிக்கையின் மூலம் எதிர்கொள்வது குறித்தும் இக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது. எல்லைப் பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவது குறித்தும் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

*ராஜ்நாத் சிங் 1* (17)

ஆபரேஷன் சிந்தூர் ஒரு ராணுவ நடவடிக்கை மட்டும் அல்ல. இந்தியாவின் அரசியல், சமூக கூட்டாண்மையின் சின்னம் என்று மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் பிரமோஸ் விண்வெளி சோதனை மையத்தை திறந்து வைத்து பேசிய அவர், பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத உள் கட்டமைப்பை அழிக்கும் நோக்கத்துடன் இந்திய படைகள் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடங்கின என்றும், பொதுமக்களை ஒருபோதும் குறி வைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். ஆனால் பாகிஸ்தான் இந்தியாவில் உள்ள பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளை மட்டும் அல்லாமல், கோவில்கள், குருத்துவாராக்கள் மற்றும் தேவாலயங்களை தாக்க முயன்றதாக குற்றம் சாட்டினார். பிரமோஸ் ஒருங்கிணைப்பு மற்றும் சோதனை வசதியின் திறப்பு விழா இந்தியாவின் பாதுகாப்பு வலிமையை மேலும் வலுப்படுத்த உதவும் என்றும் அவர் கூறினார்.

இதனிடையே, தேசிய தொழில்நுட்ப தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர்வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், அனைவரது வாழ்விலும்

*ராஜ்நாத் சிங்* 2 (13)

மாற்றத்திற்கு வித்திட்ட புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கிய விஞ்ஞானிகள், பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோருக்கு நாடு தலை வணங்குவதாக அவர் தெரிவித்துள்ளார். 1998 ஆம் ஆண்டு பொக்ரான் ஏவுகணை சோதனை வெற்றிக்கு வித்திட்ட விஞ்ஞானிகளை இந்த நேரத்தில் பெருமையோடு நினைவு கூர்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இத்தினம் இந்திய வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த தினம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய தொழில்நுட்ப தினத்தை முன்னிட்டு புதுடெல்லியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை ஏற்பாடு செய்திருந்த விழாவில், மத்திய

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் பங்கேற்றார். இந்நிகழ்ச்சியில் நடைபெற்ற ரத்ததான முகாமையும் அவர் தொடங்கி வைத்தார். அப்போது பேசிய அவர், பொக்ரான் சோதனை வெற்றியால் தேசிய தொழில்நுட்ப தினம் உந்துதல் பெற்றதாக கூறினார்.

ஷெகாவத் (3)

மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கெஜேந்திர சிங் ஷெகாவத் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் ராணுவ நடவடிக்கைகள் குறித்து செய்தியாளர்களிடம் பேசினார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

*ஷெகாவத் வாய்ஸ் (12)*

பாகிஸ்தானில் தீவிரவாதத்திற்கு எதிராக இதுவரை இந்திய ராணுவம் எடுத்துள்ள நடவடிக்கைகள் உலக அளவில் தனி அடையாளத்தை உருவாக்கி இருப்பதாக மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கெஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார். ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தீவிரவாதத்தை வேரறுப்பதில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்றும் தெரிவித்தார். இதனை கருத்தில் கொண்டு இந்திய பாதுகாப்பு படைகள் பாகிஸ்தானுக்கு தக்க பதிலடி கொடுத்து இருப்பதாகவும் அவர் கூறினார். நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் பாதுகாப்பு படை வீரர்கள் துணிச்சலுடனும், வீரத்துடனும் செயல்பட்டதாக அவர் தெரிவித்தார். இதுவரையிலான நடவடிக்கைகள் இந்திய ராணுவத்தின் வல்லமையை உலக அளவில் பறைசாற்றி இருப்பதாக திரு ஷெகாவத் கூறியுள்ளார்.

*விமானப்படை (10)*

இந்திய விமானப்படை ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் மூலம் தனக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை துல்லியமாகவும், தொழில்முறையுடனும் வெற்றிகரமாக நிறைவேற்றியதாக தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இந்திய விமானப்படை சமூக ஊடகப்பதிவில், தேசிய நோக்கங்களுடன் இணைந்து, விவேகமான முறையில் நடவடிக்கைகள் நடத்தப்பட்டதாக தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கைகள் இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதால் உரிய நேரத்தில் விரிவான விளக்கங்கள் தரப்படும் என்றும் இந்திய விமானப்படை தெரிவித்துள்ளது. மேலும், சரிபார்க்கப்படாத தகவல்களை ஊகிப்பதையும், பரப்புவதையும் தவிர்க்குமாறு அனைவரையும் கேட்டுக் கொண்டுள்ளது.

*தேசிய பாதுகாப்பு ஆலோசகர் (13)*

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவலை சீன வெளியுறவு அமைச்சர் திரு வாங்க் யூ தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். இந்த உரையாடலின் போது பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் பலர் உயிரிழந்துள்ள நிலையில், தீவிரவாத தாக்குதலுக்கு எதிரான நடவடிக்கையில் இந்தியா ஈடுபட்டுள்ளதாகவும், போர் என்பது இந்தியாவின் விருப்பம் இல்லை என்றும் அவர் விளக்கம் அளித்தார். சண்டை நிறுத்தத்திற்கு இந்தியாவும், பாகிஸ்தானும் ஒப்புக்கொண்டுள்ளதாகவும், இரு நாடுகளிலும் அமைதியும், நிலைத்தன்மையும் விரைவில் உருவாகும் என எதிர்பார்ப்பதாகவும் திரு அஜித் தோவல் தெரிவித்தார். பஹல்காம் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த சீன வெளியுறவு அமைச்சர் தீவிரவாதம் எந்த வடிவத்தில் இருந்தாலும் அதனை சீனா எதிர்ப்பதாகவும், ஆசிய பிராந்தியத்தில் அமைதியையும், நிலைத்தன்மையையும் நிலை நாட்டப்பட வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

கேலோ இண்டியா ()

கேலோ இண்டியா விளையாட்டு போட்டிகள் கடந்த 4 ஆம் தேதி தொடங்கி, 15 ஆம் தேதி வரை பீகார் மாநிலத்தில் உள்ள பாட்னா, ராஜ்கிர், கயா, பாகல்பூர் மற்றும் பெகுசராய் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வருகிறது. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு……

கேலோ இண்டியா வாய்ஸ் (17)

நாட்டின் குக் கிராமங்களில் உள்ள இளைஞர்களை விளையாட்டில் ஊக்குவிக்க மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.. அந்த வகையில், கேலோ இண்டியா 7 வது விளையாட்டு போட்டிகளை பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த ஞாயிற்றுக்கிழமை காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இப்போட்டிகளில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்கின்றனர். தற்போது இப்போட்டிகளில் மகராஷ்டிரா மாநிலம் 27 தங்கம் மற்றும் 22 வெள்ளி உட்பட 74 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. கர்நாடகா மாநிலம் 14 தங்கம் மற்றும் 19 வெள்ளி உட்பட 39 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும், ராஜஸ்தான் மாநிலம் 11 தங்கம், 4 வெள்ளி உட்பட 23 பதங்கங்களுடன் 3 வது இடத்திலும் உள்ளது. இன்று கேலோ இண்டியா விளையாட்டு போட்டியின் 8 வது நாளாகும். குத்துசண்டை, மல்யுத்தம், யோகாசனம் மற்றும் வாள்வீச்சு போன்ற பல போட்டிகள் இன்று வெவ்வேறு இடங்களில் நடைபெற்று வருகின்றன. தற்காப்பு கலை விளையாட்டான களரிபயட்டு இன்று தொடங்கியுள்ளது. ராஜ்கிர் விளையாட்டு மைதானத்தில் ஹாக்கி போட்டிகள் நடைபெற்று வருவதாகவும், கால்பந்து போடடிகள் பெகுசாரேவில் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.